திருச்சிற்றம்பலம்

# அருள்மிகு சௌந்தரநாயகி உடனுறை
# அருள்மிகு சங்காரண்யேஸ்வரர் திருக்கோயில்

நாகப்பட்டிணம் மாவட்டம்தரங்கம்பாடி வட்டம்
தலைச்சங்காடு - 609 107

27.01.2003 திங்கட்கிழமை நடந்த
திருக்குடமுழுக்கு பெருவிழாவில் வெளியிடப்பட்ட

# திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர்

(தல வரலாறும் தலப் பதிகங்களும்)



## திருமுறைகளின் பெருமைகள்

1. சிவன் பெருமைகளையும், புகழையும் கூறுவதே தமிழ் வேதமாகிய திருமுறைகள்.

2. 12 திருமுறைகள், சிவன் அடியார்கள் 27 பேரால் அருளி வழங்கப்பட்டவை.

3. திருமுறை முதல் எழுத்து "ஓ" என்றும், கடைசி எழுத்து "ம்" என்றும் "ஓம்" எனக் கூறுகிறது.

4. திருமுறைகளைப் படிப்பதால் பதினாறு வகை பேறுகளையும் பெற்று வாழலாம்.

5. திருமுறைகளில் சிவனே , "பித்தா", "தில்லைவாழ் அந்தணர்", "உலகெலாம்" எனத் தொடங்கினார்.

6. திருஞானசம்பந்தர் பொற்றாளம், பொற்காசு, முத்துச் சிவிகை, முத்துக்குடை பெற்றார்.

7. திருஞான சம்பந்தர் எலும்பைப் பெண் ஆக்கினார். பாம்பு தீண்டிய வணிகனைப் பிழைப்பித்தார்.

8. திருநாவுக்கரசர் நீற்றறையில் தென்றலையும், விஷத்தினில் அமுதத்தையும் உணர்ந்தார்.

9. திருநாவுக்கரசர் மதயானையைப் பணியவும், கல்லைத் தெப்பம் ஆக்கியும், பாம்பு விஷத்தை போக்கவும் செய்தார்.

10. சுந்தரமூர்த்தி பொற்காசுகள், தங்கக்கட்டிகள், முதலை உண்ட பாலகனையும் பெற்றார்.

11. நடராஜர் திருவாசகத்தை தன்கைபட எழுதி ஊமைப் பெண்ணை பேசவும் வைத்தார்.

12. தில்லையில் தேரை ஓடச் செய்து, சிவன் அருள் செல்வர்களை காத்து வருவன திருமுறைகளே.

திருச்சிற்றம்பலம்

# அருள்மிகு சௌந்தரநாயகி உடனுறை
# அருள்மிகு சங்காரண்யேஸ்வரர் திருக்கோயில்

நாகப்பட்டிணம் மாவட்டம்தரங்கம்பாடி வட்டம்

தலைச்சங்காடு - 609 107

27.01.2003 திங்கட்கிழமை நடந்த

திருக்குடமுழுக்கு பெருவிழாவில் வெளியிடப்பட்ட

# திருக்குடமுழுக்குப் பெருவிழா மலர்

(தல வரலாறும் தலப் பதிகங்களும்)



# பதிப்புரை

உலகில் உள்ள கடவுள்களில் ஆதியாக உள்ளவர் சிவபெருமான். அன்பே சிவம் என்றும் கூறுவர். தென்னாடு உடைய சிவன் எந்நாட்டவருக்கும் இறைவன் அவர். நாம் மனிதப்பிறவி எடுத்ததே அவரை வணங்கி பிறவாநிலை பெறவே. மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாய் வணங்க வேண்டும். மூவர் பாடிய 276 தலங்களில் ஒன்றான தலைச்சங்காடு சோழநாட்டு காவிரியின் தென்கரைத் தலங்களில் 45ஆவது தலமாக விளங்குவது.

இத்திருக்கோயில் 25.05.1966ல் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. 19.08.1996ல் தருமை ஆதினம் 26ஆவது குருமகா சந்நிதானத்தின் ஆசியுடன் திருப்பணி துவங்கப் பெற்றது. இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையினரும், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி வைகாசி விசாக குழுவினரும், தலைச்சங்காடு கிராமவாசிகள் முயற்சியாலும், வெளியூர் திருப்பணி செம்மல்களாலும் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டு சித்ரபானு ஆண்டு தை மாதம் 13ஆம் நாள் (27.01.2003) திங்கள்கிழமை தசமி திதி அனுஷ நட்சத்திரம் மீன லக்னத்தில் காலை மணி 9.45க்கு மேல் 10.30க்குள் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்நந்நாளில் தலைச்சங்காடு தலவரலாற்றையும், தலப் பதிகத்தையும் வெளியிட அனுமதி அளித்த ஆதினங்களுக்கும், அறநிலையத் துறையினருக்கும், தலைச்சங்காடு கிராமவாசிகளுக்கும், அச்சிட்ட பொறையாறு ஸ்டார்ட் கணிணி மையத்திற்கும், மலர் ஆக்கிய சிதம்பரம் ஜனகம் ஆப்செட் பிரிண்டர்ஸ்க்கும் எங்கள் நன்றியை உரித்தாக்குகின்றோம்.

திரு.இரா.இராஜசேகரன், B.Sc.B.L
உழவார இணைப்பாளர்
தாசில் பண்ணை, மேலையூர்.

திரு.வீ.கோபாலகிருஷ்ணன், B.A, B.Ed.,
சைவ சித்தாந்தப் புலவர்
திருவருள் இல்லம், மேலப்பாதி

## தலைச்சங்காடு

# ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் திருக்கோயில்

கோ.முத்துசாமி

கல்வெட்டு ஆய்வாளர், தொல்லியல் துறை - பூம்புகார்

**அமைவிடம் :**

நாகை மாவட்டம் தரங்கம்பாடி வட்டத்தில் தலைச்சங்காடு கிராமம் அமைந்துள்ளது. இவ்வூர் திருக்கடையூரிலிருந்து பூம்புகார் செல்லும் சாலையில் திருக்கடையூரிலிருந்து 8 கி.மீ தொலைவில் வடக்கில் அமைந்துள்ளது. சிதம்பரத்திலிருந்து நாகை செல்லும் பேருந்துகள் இவ்வூர் வழியாக அடிக்கடி சென்று வருகின்றன. மயிலாடுதுறையிலிருந்து பூம்புகார் வழியில் குரங்குபுத்தூர் இறங்கி தெற்கே 2 கி.மீ. உள்ளது. காரைக்காலிருந்தும் இவ்வூருக்கு பேருந்து வசதிகள் உள்ளன. தொன்மைச் சிறப்பும் வரலாற்று சிறப்பும் மிக்க இவ்வூர் சங்க காலத்தில் காவிரிப் பூம்பட்டினத்தின் ஒரு பகுதியாக விளங்கி வந்துள்ளது என்பது தொன்மைச் சான்றுகளால் புலப்படுகிறது.

திருத்தலைச்சங்காடு, திருவெண்காடு, திருச்சாய்க்காடு, திருமறைக்காடு, திருத்தலையாலங்காடு என்ற வரிசையில் திருத்தலைச்சங்காடு எனச் சிறப்புப் பெற்றது.

சங்கு வனம், சுவேத வனம், சாயா வனம், பல்ல வனம், முல்லை வனம் என்ற ஐந்து வனங்களில் சங்கு வனம் மிகவும் சிறப்புடையது.

சங்காரண்யம், சுவேதாரண்யம், வேதாரண்யம், வில்வாரண்யம், வடவாரண்யம் என்ற ஐந்து ஆரண்யங்களிலும் வைத்தும் போற்றப்படுகிறது.

**தொன்மைச் சிறப்பு :**

தலைச்சங்காட்டின் கிழக்கில் உள்ள புஞ்சை நிலங்களில் முற்காலத்தில் குடியிருப்புகள் இருந்து வந்துள்ளன என்பதை பூமிக்கடியிலிருந்து கிடைக்கும் சான்றுகள் நமக்கு மெய்ப்பிக்கின்றன. இங்குள்ள புஞ்சை திடல்களில் தொன்மையான பானை ஓடுகளும், முதுமக்கட் தாழிகளும், கெண்டியின் மூக்குப் பகுதிகளும், காதணிகளும் குடிநீருக்காக பயன்பட்ட உறை கிணறுகளும், பூமிக்கடியிலிருந்தும் மேற்பரப்பிலும் அதிக அளவில் கிடைத்துள்ளன. இவ்வூர் நடுநிலைப்பள்ளியின் விளையாட்டு திடலை சென்ற ஆண்டு மேடுபள்ளம் சரிசெய்த போது பூமிக்கடியிலிருந்து ஒரு கல்வெட்டு முற்காலச் சோழர் எழுத்தமைவில் கிடைத்துள்ளது. மேலும் இவ்வூரில் வழிப்போக்கர்கள் வணிகர்கள் தங்கிச் செல்வதற்காக ஒரு சத்திரமும் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு செட்டியார்களால் கட்டி பரிபாலிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வூரில் கிடைக்கின்ற தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகளை வைத்து பார்க்கையில் இவ்வூர் 2500 ஆண்டுகள் தொன்மை வரலாறு மிக்கது என்பது புலனாகிறது.

**பெயர்க்காரணம் :**

ஊருக்கு தலைச்சங்காடு என்றும் இவ்வூர் இறைவனை வடமொழியில் சங்காரண்யேஸ்வரர் என்றும் அழைக்கின்றனர். வருவாய்த் துறையில் இவ்வூர் "தலையுடயவர் கோயில் பத்து" பஞ்சாயத்து என்று உள்ளது.

தலை என்பது மனித உருவின் மேற்பகுதி ஆகும். சங்கு என்பது கடல்வாழ் ஒட்டு உயிரினங்களுள் ஒன்று. சங்கு என்பதற்கு பூவின் மொட்டு என்ற பெயரும் நிலவுகிறது. காடு என்பது அடர்த்தியான தோட்டத்தை குறிக்கிறது. சங்கு ஆரண்யம்

எனும்போது சங்குகள் நிறைந்த காடு என கடற்சங்குகளுக்கும், காடுகட்கும் பொருந்தாததாகிறது. எனவே பூமொட்டுகள் (சங்குகள்) பூந்தோட்டம் நிறைந்த ஊர் என்பதே பொருத்தமாகிறது. இவ்வூர் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளதாலும் காவிரியின் வாய்க்கால் இங்கு பாய்ந்து வளமைப்படுத்தியதாலும் முற்காலத்தில் இங்கு நெல், வாழை, கரும்பு, தென்னை போன்றவற்றுடன் பூந்தோட்டமும் அமைந்து பெருமளவில் பூக்களும் பயிரிட்டு திருக்கோயில்களுக்கு வழங்கி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்க செய்தியாக அமைகிறது.

முற்காலத்தில் கடலிலிருந்து கழிவுச் சோலைகள் இவ்வூர் வரை வந்து சென்றிருக்கலாம். கடல்விளைப் பொருட்களுள் ஒன்றான சங்குகள் இப்பகுதியில் அதிகம் கிடைத்திருக்கலாம். எனவே சங்கு விற்பனை இவ்வூரில் அந்நாளில் நடைபெற்றிருக்கலாம். இறைவனுக்கு சங்குகளில் புனித நீர் வைத்து கார்த்திகை சோமவார தினங்களில் நன்னீராட்டுவதும் ஒரு மரபாக இருந்து வருகிறது. சங்கினை திருமால் ஒரு ஆயுதமாகவே அணிந்து காட்சியளிக்கிறார். எனவே தலைச்சங்காடு எனப் பெயர் வந்ததாக ஒரு சாரார் கூறுகின்றனர்.

எப்படியிருப்பினும் பழந்தமிழர்கள் இயற்கை தாவரங்களின் பெயரிலேயே நிலத்திற்கும் அதனை சார்ந்த ஊருக்கும் பெயரிட்டுள்ளனர். எனவே தலைச்சங்காடு தலை+சங்கு+காடு என்று பிரித்துப்பார்த்தால் பொருள் விளங்கும். பூக்கள் தோட்டங்களில் மிகுதியாகப் பயிரிட்டு இவ்வூர் கோயிட்களுக்கும் இதனைச் சுற்றியுள்ள கோயில்களுக்கும் முற்காலத்தில் அனுப்பபட்டுள்ளன. இதற்காக நந்தவனம் அமைக்க நிலம் அளித்த செய்தி கல்வெட்டால் தெரிகிறது. எனவே பூந்தோட்டத்தை ஒட்டியே தலைச்சங்காடு என்ற பெயர் உருவாகியிருக்க வேண்டும் என்பது

தெரிய வருகிறது. இதற்காக கோயில்களுக்கு நிலமளிக்கப்பட்டதால், கோயில் பற்று என்றும் எல்லா கடவுளருக்கும் சிவபெருமானே முதன்மையானவர் என்பதை தலையுடையவர் என்னும் பெயராலும் குறிப்பிட்டுள்ளனர். எனவே தலையுடையவர் கோயில் பற்று என்பதே தலையுடையவர் கோயில் பத்து என்று மருவி வழங்குகிறது என்றும் இவ்வூரில் உள்ள இறைவன் (தலைவர்) பூந்தோட்டங்கள் (பூக்காடு) மிக்கவன் எனும் பொருளில் தலைச்சங்காடுடையார் என இறைவனுக்கும் பெயர் உண்டாயிற்று என்பதையறிய முடிகிறது.

**கோயில் கட்டடக் கலை :**

தலைச்சங்காட்டில் உள்ள சிவன் கோயில் கிழக்குப் பார்த்து அமைந்துள்ளது. இக்கோயில் தென்னாட்டில் சோழநாட்டு காவிரி தென்கரைத் தலங்களில் நாற்பத்தி ஐந்தாவது தலமாகப் போற்றப்படுகிறது. இத்திருக்கோயில அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவரான கோச்செங்கட் சோழனால் கட்டப்பெற்ற எழுபது கோயில்களில் இதுவும் ஒரு மாடக் கோயிலாகும். பூமியின் அடித்தளத்திலிருந்து உயரமான மேடையைக் கட்டி அதன் மீது தேர்போன்ற வடிவில் கோயிலை அமைப்பது பழக்கம். இவ்வாறு போர்காலங்களில் பகைவராலும், யானைகளாலும் எளிதில் உள்ளே சென்று அழிக்க முடியாமல் உயர்த்தி கட்டியதால் இத்திருக்கோயில்களுக்கு "மாடக்கோயில்கள்" என்று பெயர் உண்டாயிற்று. இவ்வூருக்கு தென்மேற்கே 5 கி.மீ. தொலைவில் உள்ள ஆக்கூரிலும் இது போன்ற மாடக்கோயில் அமைந்துள்ளது.

***சுவாமி சந்நிதி : அருள்மிகு சங்காரண்யேஸ்வரர்***

கோயிலின் பிரதான நுழைவு வாயிலில் அமைந்துள்ள கோபுரம் மொட்டை கோபுரமாகவே அமைக்கப்பட்டுள்ளது. எக்காரணத்தினாலோ கோபுரம் கட்டப்படவில்லை. உள்ளே நுழைந்து சென்றால் பலிபீடமும் கொடி மரத்து மேடையும் நந்தி

மண்டபமும் அமைந்துள்ளன. அதனையடுத்து மூலவர் திருக்கோயில் அமைந்து உள்ளது. திருக்கோயிலின் அடிப்பீடம் பனிரெண்டு அடி உயரமுடையது. நீள் சதுர மேடையாக அமைக்கப்பட்டுள்ளது. மேடையின் மீது திருக்கோயில் உயர்த்திக் கட்டப்பட்டுள்ளதால் தான் இதனை மாடக்கோயில் என்று அழைக்கிறோம்.

மூலவர் கருவறை சதுரமாக அமைக்கப்பட்டுள்ளது. நடுவில் சங்கு வனநாதர் அழகிய (சோழர் கலைப்பாணி) லிங்க வடிவில் காட்சி தருகிறார். கருவறையை அடுத்து சிறிய அர்த்த மண்டபம் அமைந்துள்ளது. இவற்றின் மீது மூலவரின் கருவறையின் மேல் ஏகத்தள விமானம் உயர்ந்த நிலையில் காட்சியளிக்கிறது. தரை மட்டத்திலிருந்து விமானம் 45 அடி உயரமுடையதாக கருதப்படுகிறது. அர்த்த மண்டபத்தை அடுத்து மகா மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. மகா மண்டபத்தில் நுழைவு வாயிலும் திரிச்சுற்றும் அமைக்கப்பட்டுள்ளன. நுழைவு வாயிலின் இருபுறமும் இரு துவார பாலகர் கற்சிற்பங்கள் நிறுவப்பட்டுள்ளன. இதனையடுத்து தெற்கு கோட்டத்தில் நர்த்தன விநாயகரும் அதனையடுத்து தென்முக கடவுளும் சனகாதி முனிவர்களுடன் கோட்டங்களில் காட்சி தருகின்றனர்.

கருவறையின் பின்புறம் மேற்கு தேவகோட்டத்தில் அடிமுடிகாணா அண்ணல் (லிங்கோத்பவர்) சிற்பம் தூண் வடிவில் அமைக்கப்பட்டுள்ளது. தூணில் நெருப்புருவமாக அண்ணா மலையாரும் அவர் தலைப்பகுதியில் அன்னப்பறவையாக நான்முகனும், கால்பகுதியில் பன்றி உருவில் திருமாலும் அமைக்கப்பட்டுள்ளனர். இவையன்றி அண்ணாமலையாரின் வலதுபக்கம் பிரம்மாவும், இடது பக்கம் திருமாலும் சிவனை வணங்கியபடி இருபுறமும் புடைப்புச் சிற்பத்தில் காட்சி தருகின்றனர்.

இறைவனின் வடக்குக் கோட்டத்தில் நான்முகன் நின்ற நிலையில் காட்சியளிக்கிறார். தலையில் முடி மகுடமும், வடிந்த காதுகளும், மார்பில் ஆரமும், முட்புரி நூலும் காணப்படுகின்றன. வயிற்றில் உதிர பந்தம் கட்டப்பட்டுள்ளது. இடுப்பின் ஆடை கணுக்கால் வரை செல்கிறது. நான்கு கைகளில் முறையே வலது முன்கை அபயமாகவும், பின்கை அக்கமாலை ஏந்தியும், இடது முன்கை தொடைமீது வைத்தும், பின்கை கெண்டி ஏந்தியும் காட்சியளிக்கிறார்.

**கொற்றவை (துர்க்காதேவி) :**

வெற்றியை வேண்டியவர்களுக்கு அளிக்கும் தெய்வமாகிய கொற்றவை மகிஷாசுர மர்த்தினியாக காட்சியளிக்கிறார். மகிஷனாகிய எருமை தலையின் மீது கம்பீரமாக நின்ற நிலை. தலையின் ஜடா மகுடம், காதுகளில் மகர குண்டலம், மார்பில் கச்சையும், ஆரங்களும் அணிந்துள்ளார். இடுப்பின் ஆடை கணுக்கால் வரை செல்கிறது. நான்கு கைகளில் முறையே வலது முன்கை அபயமாகவும், பின்கை சக்கரம் ஏந்தியும், இடது முன்கை தொடைமீது வைத்தும், பின்கை சங்கேந்தியும் பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் நிலையில் வடக்கு தேவகோட்டத்தில் காட்சியளிக்கிறாள்.

தேவ கோட்டத்தில் அமைந்துள்ள சிற்பங்களும், வாயிற்காவலர் (துவாரபாலகர்) சிற்பங்களும் பிற்கால சோழர் கலைப்பணியில் அமைந்துள்ளன. இவற்றின் காலம் கி.பி.13ம் நூற்றாண்டு ஆகும்.

**ஆடல் வல்லான் சந்நிதி :**

இறைவன் அமைந்துள்ள சந்நிதிக்கு முன்பாக அமைந்துள்ளது முகமண்டபம் எனப்படுகின்றது.

இம்முகமண்டபத்தில்தான் தெற்கில் கோயிலுக்குள் நுழைய படிக்கட்டுகளும், நுழைவு வாயிலும் அமைக்கப்பட்டுள்ளன. நுழைவு வாயிலின் எதிரில் தெற்கு பார்த்தபடி ஒரு சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஆடல்வல்லான், சிவகாமி போன்ற செப்புத்திருமேனிகள் காட்சியளிக்கின்றன. இச்சந்நிதியின் வலதுபக்க சுவரின் புடைப்புச் சிற்பமாக இம்மண்டபத்தை கட்டிய மன்னனின் திருவுறுவம் நின்றநிலையில் வணங்குவதுபோல் காட்சியளிக்கிறது.

**தனிச்சந்நிதிகள் :**

மொட்டைக் கோபுரத்திலிருந்து நான்கு பக்கமும் திருச்சுற்றாக பெரிய மதில் சுவர் எழுப்பப்பட்டுள்ளது. பின்புறம் மேற்கே ஒரு நுழைவு வாயிலும் அமைக்கப்பட்டுள்ளது. பின்புறம் திருச்சுற்றை ஒட்டி தென்மேற்கு மூலையில் ஒரு சந்நிதி உள்ளது. அதில் நின்ற நிலையில் திருமால் தனது ஸ்ரீதேவி மற்றும் பூதேவியுடன் காட்சியளிக்கிறார். இது வேறொரு இடிந்த வைணவ கோயிலிலிருந்து பாதுகாப்புக்காக இங்கு வந்து வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து வடக்கில் உள்ள பிள்ளையாருக்கு தனிச்சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு வடக்கில் சிங்காரவேலனாக சுப்ரமணியர் வள்ளி, தேவசேனாவுடன் காட்சியளிக்கிறார். இவ்விரு சந்நிதிகளும் மேடையின்மீது உயர்த்தி கட்டப்பட்டுள்ளன.

இதற்கு கிழக்கில் சிவபெருமானின் கோயில் சொத்துக்களை பாதுகாக்கும் தெய்வமாகிய சண்டேஸ்வரர் சந்நிதி அமைந்துள்ளது. இதில் சண்டேஸ்வரர் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். இதுவல்லாமல் மேலும் இரண்டு சண்டேஸ்வரர் தனிச்சிற்பங்களும் திருக்கோயிலில் காணப்படுகின்றன.

**அம்மன் சந்நிதி அருள்மிகு சௌந்தரநாயகி அம்மன் :**

இறைவன் கோயிலின் முன்பாக தெற்கு பார்த்தபடி அம்மன் சந்நிதி பிற்காலத்தில் கட்டடப்பட்டுள்ளது. அம்மன் சந்நிதி நாயக்கர் மன்னர்களால் கட்டடப்பட்டவை என தெரியவருகிறது. அம்மன் சந்நிதிக்கு முன்பாக உள்ள முன்மண்டபத்தை நாயக்கர் மன்னர் காலத்தில் அவரது அரசு அதிகாரியாகிய திருவலஞ்சுழியுடையார் என்பவர் கட்டி திருப்பணி செய்ததை குமுதப்பட்டியில் உள்ள கல்வெட்டால் அறியமுடிகிறது.

**தலவிருட்சம் :**

இக்கோயிலில் அம்மன் சந்நிதியின் பின்பாக கோயிலின் தலத்தருவான புரசமரம் அமைந்துள்ளது. முற்காலத்தில் இப்பகுதியில் புரச மரங்கள் காடாக வளர்ந்திருந்தன. எனவே இதன் பெயரால் தலைசை வனம் என வழங்கப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது. இதுவன்றி சிவனுக்கு உகந்த வில்வமரங்களும் திருச்சுற்றில் அமைந்துள்ளன.

**புனித தீர்த்தம் :**

திருக்கோயிலின் முன்பாக தீர்த்த குளம் அமைந்துள்ளது. இத்தீர்த்தத்துக்கு சங்கு தீர்த்தம் என்று பெயர். பௌர்ணமி அமாவாசை திதிகளிலும் சோமவார தினத்திலும் இப்புனித தீர்த்தத்தில் நீராடி இறைவனையும், அம்மனையும் வணங்கி வலம் வந்தால் கல்விப் பேறு, செல்வப் பேறு, பிள்ளைப் பேறு முதலான நற்பேறுகளை அடைவது உறுதி.

**சிற்பங்களின் கலையழகு :**

இக்கோயிலின் வடமேற்கு மூலையில் மூத்த தேவியின் (ஜேஷ்டா) சிற்பம் மேடையின் மீது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பம் மற்ற சிற்பங்களைவிட மிகப்பழமையானது. தாய்மார்

எழுவருள் (சப்தகன்னியர்) இவர் மூத்தவர். உலகில் மக்கட் செல்வம் பெருக வரம் அளித்தவர். இக்கால மக்கள் பொருட்செல்வத்தை அளிக்கும் ஸ்ரீதேவியின் அருளை அதிகம் விரும்பி வழிபடுவதால் அக்காளுக்கு மூதேவி என்று பெயர் சூட்டி ஓரம் கட்டி விட்டனர். இருப்பினும், தனது குழந்தைகளான மாந்தன் வலது புறத்திலும், மாந்தி இடதுபுறத்திலும் கொண்டு அமர்ந்த நிலையில் காட்சியளிக்கிறார். முற்கால சோழர் கலைப்பாணியில் இச்சிற்பம் எழிலுடன் வடிக்கப்பட்டுள்ளது. இதன் காலம் கி.பி 9ம் நூற்றாண்டு.

**குபேரர்கள் :**

முகப்பில் கொடிமரத்தை அடுத்துள்ள பலிபீடத்தில் கிழக்கில் நர்த்தன விநாயகரும், தெற்கில் சங்கநிதியும், மேற்கில் மகுடி ஊதும் காவல் பூதமும், வடக்கில் பத்மநிதியும் புடைப்புச்சிற்பமாக தனித்தனி கல்லில் செதுக்கி மேடையில் பதித்துவைக்கப்பட்டுள்ளது. கணங்களின் நாயகனான கணபதிக்கு பின்னால் செல்வங்களைக் காக்கும் பூத கணங்களான சங்கநிதி, பதுமநிதி என்ற குபேரர்களும் ஒரே இடத்தில் காட்சி தருவது இத்தலத்திற்குரிய தனிச்சிறப்பாக கருதப்படுகிறது. இதனையொட்டிய மற்றொரு நர்த்தன விநாயகர் மூலவரின் பின்புறம் உள்ள மாடத்தில் கிழக்கு பார்த்தபடி எழிலுடன் காட்சி தருகிறார். இச்சிற்பங்களும் கி.பி.9ம் நூற்றாண்டை சார்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

பலிபீடத்திற்கு மேற்கே நந்தி உள்ளது. அதற்கு எதிரே உமையொரு பாகராய் நின்ற கோலத்தில் காட்சிதரும் திருவுருவம் உள்ளது.

**சமயக்குரவர்கள் :**

ஆடல்வல்லான் சந்நிதிக்கு தெற்கிலுள்ள மேடையில் சமயக்குரவர்களான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் போன்றவர்களும் நாயக்கர் காலத்தில் செய்யப்பட்ட கோவிந்த தீட்சிதரும் காட்சியளிக்கின்றனர். இச்சிற்பங்களை அடுத்து பிற்காலத்தில் கோயிலை புதுப்பித்துக் கட்டிய மூன்றாம் குலோத்துங்க சோழ மன்னனின் உருவமும் (கி.பி.1178-1218) நின்ற நிலையில் காட்சி அளிக்கின்றன.

**கல்வெட்டுச் செய்திகள் :**

இத்திருக்கோயிலில் மொட்டை கோபுரத்தின் மேற்கு மற்றும் வடக்கு பகுதி பட்டிகைகள் மூலவர் திருக்கோயிலின் தென்சுவர், மேற்கு சுவர், வடக்கு சுவர் அடிப்பகுதிகள், அம்மன் சந்நிதியின் அருகால், ஆடவல்லான் சந்நிதியின் அருகால் துர்க்கை கோஷ்டத்திற்கு அருகில் உள்ள தூண், அம்மன் சந்நிதியில் படிக்கட்டு போன்ற இடங்களில் பத்திற்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவைகளில் சோழர் கால கல்வெட்டுகளே மிகுதி. ஒரு சில நாயக்கர் காலத்தை சார்ந்தவை. இக்கல்வெட்டுக்கள் வாயிலாக பிற்கால சோழர்கள் இக்கோயிலுக்கு

1) நந்தவனம் அமைக்க நிலக்கொடை அளித்த செய்தியும்

2) கோயிலுக்கு அணையா விளக்கு எரிக்க எண்ணெய்க்காக நிலத்தானம், பசுக்கள் தானம் அளித்த செய்தியையும்

3) கோயிலில் திருவிழாக்கள் தவறாமல் நடைபெற பொற்காசுகள் தானமாக அளித்த செய்தியும், கோயிலில் இறைவனுக்கும், அடியார்களுக்கும், பக்தர்களுக்கும் அமுதுபடி, சாத்துபடி செய்வதற்கு நெல்தானமும், அதற்கு வரிநீக்கிய நிலதானம்

அளித்த செய்தியும் விரிவாக கூறப்பட்டுள்ளன. மேலும் கொடையாக அளிக்கப்பட்ட நிலங்களுக்குரிய நான்கு எல்லைகளும் அந்நிலங்களின் வழியாக பாய்ந்து சென்ற வாய்க்கால்களும், அதனை பராமரிக்கும் அதிகாரிகள் பெயரும், கல்வெட்டு ஆவணங்களை கோயில்களில் எழுதி புதுப்பித்த அதிகாரிகள் பெயரும், இதற்கு சாட்சி கையொப்பமிட்ட ஊர்ச்சபையின் முக்கியஸ்தர்கள் பெயரும் கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ளதை அறிய முடிகிறது. செங்கணான் காலத்து கோயில் பின்னாளில் இடிபாடுற்று அழிந்த நிலையில் பிற்கால சோழர்களால் கோயில் புதிதாக கட்டப்பட்டு அவர்கள் காலத்தில் சிற்பங்களும், கல்வெட்டுகளும் புதிதாக அளிக்கப்பட்டுள்ளன. சோழர்கால திருப்பணியும் பின்னாளில் அழிவுற்று அதனை நாயக்கர் காலத்தில் மீண்டும் புதுப்பித்துள்ளனர். இக்காலத்தில் கல்வெட்டுக்கள் தலைகீழாகவும், இடம் மாறியும் அமைக்கப்பட்டுள்ளன என்பது தற்காலத்தில் கோயிலில் உள்ள கல்வெட்டுகளின் வாயிலாக அறிய முடிகிறது. எனவே தற்பொழுது நடைபெறும் திருப்பணி 5 அல்லது 6வது திருப்பணி என்பதை அறிய முடிகிறது.

**சம்பந்தர் தேவாரம் :**

இத்திருக்கோயிலை சைவ சமய நால்வர் பெருமக்களுள் ஒருவரான திருஞானசம்பந்தர் ஒரு பதிகம் பாடியுள்ளார். இவர் பாடல்களில் தலைச்சங்கை என்று ஊர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர் காலத்திலேயே மாடக்கோயில் உயர்ந்த நிலையில் அமைந்திருந்ததை தக்கோர் வாழுந்தலைச்சங்கை ஏர்கொண்ட கோயிலே கோயிலாக விருந்தீரே என்று குறிப்பிட்டுள்ளதால் மாடக்கோயிலின் பெருமையை நாம் அறிய முடிகிறது. மேலும் பூக் கொண்டு தொண்டர்கள்

வழிபட்டனர் என்று குறிப்பிட்டுள்ளதால் பூந்தோட்டம் பல அமைந்திருந்தன என்பதுவும், நன்னூல்கள் பயின்ற நீதிமான்கள், அறம் வழுவா சான்றோர் போன்றோர்களும் இங்கு வாழ்ந்தனர், என்பதுவும் சம்பந்தர் பாடலால் தெரியவருகிறது.

மேலும் அப்பர் அடிகள் திருதாண்டகத்திலும் தலைச்சங்கைப் பெருங்கோயில் தங்கினார் என்று குறிப்பிடப்படுவதால் இங்கு பெரிய மாடக்கோயில் இருந்ததும் அங்கு காவிரியில் வண்டல் நீர் பாய்ந்து இப்பகுதி செழிப்புடன் விளங்கியதையும் அப்பர் அடிகள்பாடலால் நாம் அறிய முடிகிறது.

இவ்வாறு நிலவளமும், நீர்வளமும் தலைச்சங்காட்டில் தொன்று தொட்டு வளமைப்படுத்தி வந்தமையும், இதனால் சங்ககாலத்திற்கு முன்பிருந்தே இவ்வூர் சிறப்புற்றிருந்தது என்பதுவும் இவ்வூரில் சங்க ஆரண்யேசுவரர் சிவன் கோவிலுடன் மூன்று இடங்களில் நான்மதிய பெருமாள் கோயில் உள்ளிட்ட பெருமாள் கோயில்களும் மூன்று கோலங்களில் அமைந்திருந்தன என்பதுவும் அவற்றுள் இரண்டு கோயில்கள் இடிபாடுகளில் அழிந்துவிட்டன என்பதுவும் தெரியவருகிறது.

மேலும் இவ்வூரில்தான் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் மாடல மறையோன் என்ற வேதியர் வாழ்ந்தார் என்பதுவும் தெரிய வருகிறது. எனவே இவ்வூர் தொல்லியல் சிறப்பும், வரலாற்று சிறப்பும், இலக்கியச் சிறப்பும் மிக்க ஒரு பழமையான ஊர் என்பது இதன் மூலம் உறுதியாகிறது.

**மற்ற சந்நிதிகள் :**

கோயிலின் பிரதான வாயிலை நுழைந்த பின் வலது புறத்தில் சூரியனும், பைரவரும், சிவலிங்கம் ஒன்றும் அருள் புரிகின்றனர்.

## திருஞானசம்பந்தர் முதல் திருமுறை பண் : காந்தாரம்

### திருச்சிற்றம்பலம்

1. நலச்சங்க வெண்குழையுந் தோடும்பெய்தோர் நால்வேதம்
சொலச் சங்கை யில்லாதீர் சுடுகாடல்லாற் கருதாதீர்
குலைச்செங்காய்ப் பைங்கமுகின் குளிர்கொள்சோலைக் குயிலாலும்
தலைச்சங்கைக் கோயிலே கோயிலாகத் தாழ்ந்தீரே.

அழகிய சங்காலான வெள்ளிய குண்டலமும் தோடும் அணிந்து, நான்கு வேதங்களும் தம்மைப் புகழ்ந்து போற்ற தமக்கு எதுவும் இன்றி விளங்குபவரே! இடுகாட்டை விரும்பி உறையும் நீர், குயில்கூவும் கமுகம் சோலைகள் சூழ்ந்த தலைச்செங்கைக் கோயிலைத் தம் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

2. துணிமல்கு கோவணமுந் தோலுங்காட்டித் தொண்டாண்டீர்
மணிமல்கு கண்டத்தீ ரண்டர்க்கெல்லா மாண்பானீர்
பிணிமல்கு நூன்மார்பர் பெரியோர்வாழுந் தலைச்சங்கை
அணிமல்கு கோயிலே கோயிலாக அமர்ந்தீரே.

கிழிந்த கோவண ஆடைகட்டிப் புலித்தோல் உடுத்து யானைத்தோலைப்போர்த்து அடியவர் தொண்டை ஏற்று அவரை ஆண்ட பெரியவரே! நீலகண்டரே! தேவாதிதேவரே! பலரையும் கவரும் தன்மையும் நூன்மார்பும் உடையவரே! அந்தணர் பலரும் வாழும் தலைச்சங்காட்டிலுள்ள கோயிலைத் தம் கோயிலாகக் கொண்டு அமர்ந்துள்ளீர்.

3. சீர்கொண்ட பாடலீர் செங்கண்வெள்ளே றூர்தியீர்
நீர்கொண்டு பூக்கொண்டு நீங்காத்தொண்டர் நின்றேத்தத்
தார்கொண்ட நூன்மார்பர் தக்கோர்வாழுந் தலைச்சங்கை
ஏர்கொண்ட கோயிலே கோயிலாக விருந்தீரே.

சிறந்த வேதப்பாடலை உடையீர்! செங்கண் வெள்ளேற்றை ஊர்தியாக உடையீர்! நீரும் பூவும் கொண்டு தொண்டர் பரவி ஏத்த மாலையும் முப்புரிநூலும் அணிந்த மார்பை உடையீர்! தக்கோர்வாழும் தலைச்சங்கானத்திலுள்ள அழகிய கோயிலைக் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

4. வேடஞ்சூழ் கொள்கையீர் வேண்டிநீண்ட வெண்டிங்கள்
ஓடஞ்சூழ் கங்கையு முச்சிவைத்தீர் தலைச்சங்கைக்
கூடஞ்சூழ் மண்டபமுங் குலாயவாசற் கொடித்தோன்றும்
மாடஞ்சூழ் கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

ஒருவராய்ப் பல வேடங்களைக் கொண்டவரே! ஓடம் போல் விளங்கும் பிறையையும் கங்கையையும் முடிமீதுகொண்டவரே! தலைச்சங்கையில் கூடம், மண்டபம், மாடம் சூழ்ந்த கோயிலாகக் கொண்டுள்ளீர்.

5. சூலஞ்சேர் கையினீர் சுண்ணவெண்ணீ றாடலீர்
நீலஞ்சேர் கண்டத்தீர் நீண்டசடைமே னீரேற்றீர்
ஆலஞ்சேர் தண்கான லன்னமன்னுந் தலைச்சங்கைக்
கோலஞ்சேர் கோயிலே கோயிலாகக் கொண்டீரே.

சூலம் சேர்ந்த கையை உடையவரே! சுண்ண வெண்ணீறு பூசியவரே! நீலகண்டரே! நீண்ட சடைமேல் கங்கையை ஏற்றவரே! நீர்வளம் சூழ்ந்த சோலைகளை உடைய தலைச்செங்கானத்திலுள்ள அழகிய கோயிலைக் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

6. நிலநீரோ டாகாச மனல்காலாகி நின்றைந்து
புலநீர்மை புறங்கண்டார் பொக்கஞ்செய்யார் போற்றோவார்
சலநீத ரல்லாதார் தக்கோர்வாழுந் தலைச்சங்கை
நலநீர கோயிலே கோயிலாக நயந்தீரே.

நிலம் முதலிய ஐம்பூதங்களானவர், ஐம்புலன்களை வென்றவர், பொய்யறியாதவர், எல்லோராலும் போற்றப்படுபவர், வஞ்சகம் இழிவு இல்லாதவர். தக்கோர் வாழும் தலைச்செங்கானத்தில் அழகிய கோயிலை இருப்பிடமாகக் கொண்டடீர்.

7. அடிபுல்கு பைங்கழல்க ளார்ப்பப்பேர்ந்தோ ரனலேந்திக்
கொடிபுல்கு மென்சாய லுமையோர் பாகங்கூடினீர்
பொடிபுல்கு நூன்மார்பர் புரிநூலாளர் தலைச் சங்கைக்
கடிபுல்கு கோயிலே கோயிலாகக் கலந்தீரே.

திருவடிகளில் பொருந்திக் கழல்கள் ஆர்ப்ப நடமாடி, அனலேந்தி, கொடிபோன்ற சாயலை உடைய உமையம்மையை ஓர் பாகம் கொண்டவரே! நீறுபூசிய நூல்மார்பரே! அந்தணர் வாழும் தலைச்செங்கைக் கோயிலைக் கோயிலாகக்கொண்டுள்ளீர்.

8. திரையார்ந்த மாகடல்சூழ் தென்னிலங்கைக் கோமானை
வரையார்ந்த தோளடர விரலாலூன்று மாண்பினீர்
அரையார்ந்த மேகலையீ ரந்தணாளர் தலைச்சங்கை
நிரையார்ந்த கோயிலே கோயிலாக நினைந்தீரே.

இலங்கை மன்னன் இராவணனை மலையின்கீழ் அகப்படுத்திக் கால்விரலால் அடர்த்த மாண்பினீர்: அரையில் மேகலை அணிந்தவரே! அந்தணர் வாழும் வரிசை அமைந்த கோயிலைத் தம் கோயிலாகக் கொண்டுள்ளீர்.

9. பாயோங்கு பாம்பணைமே லானும்பைந்தா மரையானும்
போயோங்கிக் காண்கிலார் புறநின்றோரார் போற்றோவார்
தீயோங்கு மறையாளர் திகழுஞ்செல்வத் தலைச்சங்கைச்
சேயோங்கு கோயிலே கோயிலாகச் சேர்ந்தீரே.

பாம்பணையில் பள்ளிகொள்ளும் திருமாலும், நான்முகனும்; பன்றியும், அன்னமுமாய் கீழிடந்தும், பறந்தும் சென்று காண அரியவர், புறச்சமயக் கொள்கைகளால் ஆராயப்படாதவர், துதிஒவாதவர். முத்தீவேட்கும் அந்தணர் வாழும் சங்கைக் கோயிலைத்தம்கோயிலாகக் கொண்டுள்ளீர்.

10. அலையாரும் புனல்துறந்த வமணர்குண்டர் சாக்கியர்
தொலையாதங் கலர்தூற்றத் தோற்றங்காட்டி யாட்கொண்டீர்
தலையான நால்வேதந் தரித்தார்வாழுந் தலைச்சங்கை
நிலையார்ந்த கோயிலே கோயிலாக நின்றீரே.

குளியாத அமணரும் குண்டரும் சாக்கியரும் இடைவிடாது அலர்தூற்ற அன்பர்கட்குத் தோற்றம் காட்டிப் பின் ஆட்கொண்டவரே. நான்கு வேதங்களை ஓதும் அந்தணர் வாழும் திருக்கோயிலைத் தம் கோயிலாகக் கொண்டுள்ளீர்!

11. நளிரும் புனற்காழி நல்லஞான சம்பந்தன்
குளிருந் தலைச்சங்கை யோங்குகோயின் மேயானை
ஒளிரும் பிறையானை யுரைத்தபாட லிவைவல்லார்
மிளிருந் திரைசூழ்ந்த வையத்தார்க்கு மேலாரே.

நீர்வளம்சான்ற காழிஞானசம்பந்தன் தலைச்சங்கை கோயிலில் விளங்கும் பிறைசூடிய பெருமானைப் பாடிய பாடல்களை ஓதி வழிபடுவர் விண்ணுலகு ஆள்பவர்.

திருச்சிற்றம்பலம்

## இத்தலப்பெயர் குறிப்பிடப் பெற்றுள்ள திருநாவுக்கரசர் அருளிய ஆறாம் திருமுறைத் திருத்தாண்டகப் பாடல்கள்

சிந்தும் புனற்கெடில வீரட்டமும்
திருவாஞ் சியமும் திருநள் ளாறும்
அந்தண் பொழில்புடைசூழ் அயோகந்தியும்
ஆக்கூரும் ஆவூரும் ஆன்பட்டியும்
எந்தம் பெருமாற்கு இடமாவதாம்
இடைச்சுரமும் எந்தை **தலைச்சங்காடும்**
கந்தங் கமழுங் கரவீரமும்
கடம்பூர்க் கரக்கோயில் காப்புக்களே.

கொண்டலுள்ளார் கொண்டீச் சரத்தி னுள்ளார்
கோவலூர் வீரட்டங் கோயில் கொண்டார்
தண்டலையார் தலையாலங் காட்டி லுள்ளார்
**தலைச்சங்கைப்** பெருங்கோயில் தங்கி னார்தாம்
வண்டலொடு மணற்கொணரும் பொன்னி நன்னீர்
வலஞ்சுழியார் வைகலின்மேல் மாடத் துள்ளார்
வெண்டலைக்கைக் கொண்ட விகிர்த வேடர்
வீழி மீழலையே மேவி னாரே.

இடைமருது ஈங்கோய் இராமேச்சரம்
இன்னம்பர் ஏரிடவை ஏமப் பேறூர்
சடைமுடி சாலைக் குடிதக்களூர்
தலையாலங்காடு தலைச்சங்காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பத் துறை
கயிலாய நாதனையே காண லாமே.

மலையார்தம் மகளொடுமா தேவன் சேரும்
மறைக்காடு வண்பொழில் சூழ் தலைச்சங்காடு
தலையாலங் காடுதடங் கடல் சூழந்தண்
சாய்க்காடு தள்ளுபுனற் கொள்ளிக் காடு
பலர் பாடும் பழையனூர் ஆலங்காடு
பனங்காடு பாவையர்கள் பாவம் நீங்க
விலையாடும் வளைதிளைக்கக் குடையும் பொய்கை
வெண்காடும் அடையவினை வேறா மன்றே.

## திருவாசகம் - எட்டாம் திருமுறை - மாணிக்க வாசகர்

வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனம்நின்பால்
தாழ்த்துவதும் தாம்உயர்ந்து தம்மை எல்லாந் தொழவேண்டி
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானும் உன்னைப் பரவுவனே.

## திருவிசைப்பா- ஒன்பதாம் திருமுறை - திருமாளிகைத் தேவர்

ஏகநா யகனை இமையவர்க்கு அரசை
என்னுயிர்க்கு அமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா ஊர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே.

### திருப்பல்லாண்டு - ஒன்பதாம் திருமுறை - சேந்தனார்

குழலொலி யாழொலி கூத்தொலி
ஏத்தொலி எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று
விம்மிமிகு திருவாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி
ஆளாய் மணஞ்செய் குடிப்பிறந்த
பழஅடி யாரொடுங் கூடி
எம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## பெரிய புராணம் - 12ஆம் திருமுறை - சேக்கிழார்

### திருஞானசம்பந்தர் புராணம்

அம்பிகை அளித்த ஞானம் அகிலமும் உய்ய வுண்ட
நம்பெருந் தகையார் தம்மை எதிர்கொண்டு நண்ண வேண்டி
உம்பரும் வணங்கு மெய்ம்மை உயர்தவத் தொண்டரோடுந்
தம்பெரு விருப்பால் வந்தார் தலைசை அந்தணர்க ளெல்லாம்.

காவண மெங்கு மிட்டுக் கமுகொடு கதலி நாட்டிப்
பூவணை தாமந் தூக்கிப் பூரண கும்ப மேந்தி
ஆவண வீதி யெல்லாம் அலங்கரித்து அண்ணலாரை
மாவணை மலர்மென் சோலை வளம்பதி கொண்டு புக்கார்.

திருமறை யோர்கள் சூழ்ந்து சிந்தையின் மகிழ்ச்சி பொங்கப்
பெருமறை ஓசை மல்கப் பெருந்திருக் கோயில் எய்தி
அருமறைப் பொருளா னாரைப் பணிந்தணி நற்சங் கத்தின்
தருமுறை நெறியக் கோயில் சார்ந்தமை யருளிச் செய்தார்.

### வாழ்த்து - கச்சியப்பர்

வான்முகில் வழாது பெய்க; மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க; குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க; நல் தவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்

## தினசரி செய்ய வேண்டிய கடமைகள்

1. ஐந்து மணிக்கு எழுந்து, கிழக்கு திசை நோக்கி சிவன் நாமத்தை 108 தடவை நினைப்போம்.

2. குளிக்கும்போது கிழக்கு அல்லது வடக்குதிசை நோக்கி இறைவன் எண்ணத்தில் குளிப்போம்.

3. காலையில் பூஜை, தியானம் செய்வது தனி அறையில் இருந்து வழிபாடு செய்வோம்.

4. சாத்வீக ஆகாரத்தை நன்றாக மென்று, மௌனம் கடைபிடித்து, அளவாக உண்போம்.

5. கடமையை நிறைவேற்றுவதில் உறுதியுடன் இருந்து உழைத்து உயர்வோம்.

6. உண்மையை எந்த நிலையிலும் பேசி கொஞ்சமாக இனிமையாக பேசுவோம்.

7. நமது வருவாயில் குறைந்தது நூறில் ஒரு பங்கு தானம், தருமங்கள் செய்வோம்.

8. ஒரு மாதத்திற்கு ஒரு நாளாவது உபவாசம் இருந்து அல்லது பால் பழம் சாப்பிடுவோம்.

9. எளிமையான வாழ்க்கையும், உயர்ந்த எண்ணங்களையும் எண்ணுவோம்.

10. எல்லா மதத்தினரிடமும், எல்லா சாதியினரிடமும் அன்புடன் பழகி வருவோம்.

11. நம் கழுத்திலோ அல்லது பையிலோ ருத்திராக்க மாலை வைத்திருப்போம்.

12. படுக்கைக்கு செல்லும் முன்பு வடக்கு திசை நோக்கி சிவன் நாமத்தை 108 தடவை சிந்திப்போம்.

உ

திருச்சிற்றம்பலம்

கும்பாபிஷேக மலர் சிறக்க வணங்கி வாழ்த்தும்

Software Training
Computer Sales & Service
Offset Printing
Project Works
Video Cassette to CD Conversion
CD Writing

**START Systems**

COMPUTER EDUCATION

6, Sivan North Street, Porayar Ph. 288277

ஆப்செட் பிரிண்டிங்
ஜெராக்ஸ்
பைண்டிங் ஒர்க்ஸ்

**ஜனகம் ஆப்செட் பிரிண்டர்ஸ்**

பாவா முதலி தெரு,
சிதம்பரம். பேச. 221509

ஸ்டார்ட் ஆப்செட் பிரிண்டர்ஸ், பொறையாறு ☎ 288277